## 32.4 சிலைகள் நிறுவுதல் மற்றும் பராமரித்தல்

ஊரக வளர்ச்சி (சி2)துறை

அரசாணை (நிலை) எண். 248 நாள் : 23.11.1998

1. அரசாணை (நிலை)எண். 1711, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 26.10.1979.
2. ஊரக வளர்ச்சித் துறையின் கடிதம் எண். 15611/சி3/94–6 நாள் 12.6.1995.
3. அரசாணை எண். 186, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21.9.1998.

**ஆணை**

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில், சிலை செய்து நிறுவுவது சம்மந்தமாக ஏற்படக் கூடிய முழுச் செலவுக்கும் சமமான (அதாவது 100 சதவீதம் உள்ள தொகையை, இனி உள்ளாட்சி அமைப்பிற்கு சிலை பராமரிப்பிற்காக சிலை வைப்பவர்கள் கொடுக்க வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. பார்வை 2–ல் உள்ள அரசு கடிதத்தில் பொதுப்பணித் துறை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குள் அனுமதியின்றி போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் சிலைகள் நிறுவப்பட்டு இருந்தால் அந்தந்தப் பகுதியின் அமைதிக்கு பங்கம் ஏற்படாமல், சிலை நிறுவியவர்களிடம் சிலையை பராமரிக்க பார்வை ஒன்றில் உள்ள அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை பெற்று பராமரித்து வருமாறும், தொகை செலுத்தப் பெறாத சிலைகளை அகற்றி விடுமாறும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். பார்வை மூன்றில் கண்டுள்ள அரசாணையில் அரசாங்கமோ அல்லது தனிப்பட்ட நிறுவனங்களோ எந்த தலைவருக்கும் சிலை நிறுவுதல் கூடாது என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆணையிட்டுள்ளது.

2) இந்நிலையில் 22.10.98 மற்றும் 26.10.98 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் சிலை வைப்பது தொடர்பாக கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. இனிமேல் புதியதாக சிலை வைப்பதாக இருந்தால், அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்பட வேண்டும்.
2. சிலைகளை வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
3. ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள சிலைகள் பராமரிக்கின்ற பொறுப்பும் பாதுகாக்கின்ற பொறுப்பில் அந்தச் சிலைகளை வைத்த சங்கம் அல்லது பிரிவு அல்லது தனிப்பட்டவரையே சாரும்.

3) சிலை நிறுவுவது தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆணைகள் அனைத்தையும் மாற்றி கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றியம் / மாவட்ட ஊராட்சிகளின் பகுதிகளில் சிலை நிறுவுவது மற்றும் பராமரிப்பது தொடர்பாக புதிதாக ஆணைகள் வெளியிட இத்துறை கருதுகிறது.

4) அரசு இதனை நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

1. சிலை, நினைவுத் தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை எதுவாயினும் அரசின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும்.
2. ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள சிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றைப் பொறுத்தமட்டிலும் அச்சிலைகளை நிறுவியவர்களே (சிலை வைத்த சங்கம், பிரிவு, தனிப்பட்டவர் போன்றவர்) பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
3. ஏற்கனவே நிறுவப்பட்ட சிலைகள் சீர்குலையாமலிக்க, அச்சிலைகளை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று திரும்பவும் நிறுவுவதை தேவையெனக் கருதப்பட்டால், இது குறித்து அரசிடம் ஆணை பெற்ற பின் சம்மந்தப்பட்ட தனிநபர் அமைப்பு போன்றவற்றால் மாற்றி அமைக்கப்படலாம்.
4. மேலே குறிப்பிட்டபடி, சிலை வைப்பது தொடர்பாக வெளியிடப்படும் ஆணைகள் நினைவுத் தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு ஆகியவை அமைப்பதற்கும் பொருந்தும்.
5. மேலே பத்தி 4–ல் வெளியிடப்படும் ஆணைகள், ஆணைகள் வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வருகின்றன.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்